**சுனாமிக்குப் பிந்திய கரையோரப் புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் - 2013**

---

சுனாமிக்குப் பிந்திய கரையோரப் புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 திசெம்பர் 01 ஆம் திகதிய 664 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.02(அ) ஆம் பிரிவு மற்றும் 2008 ஏப்ரல் 18 ஆந் திகதிய 693 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 3.01 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கும் முகவராகும். குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு அத்தியாவசிய சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புக்களை குறிப்பாக வீடமைத்தலும் வழங்குதலுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்களை வலுப்படுத்துவதுடன் கரையோர வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்தல். மற்றும் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொலர் 36.14 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,386.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 31.35 மில்லியன் அல்லது 86.7 சதவீதம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியிடப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 மார்ச் 06 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2013 திசெம்பபர் 31 ஆம் திகதி பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமாப்பிக்கப்படுவதற்குரிய உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளையும், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு

செய்தல், அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகிறேன். அப்பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமெனத் தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத் தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவு இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டச் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட பற்றுதல்கள் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்ட நோக்கங்களுக்காவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தை அமுற்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டதா என்பதும்

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்து பற்றுதல்கள் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**3. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகக் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (செல.கூற்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக நியாயமாக நம்பிக்கையை வைக்கமுடியும் என்றும்,

(உ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவுகள் ரூபா 440,127,441 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் ரூபா 3,890,562,239 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சிவில் வேலைகள் | 208,210,383 | 764,342,234 | 2,668,383,781 |
| மோட்டார் வாகனங்கள், உபகரணம் மற்றும் படகுகள் | (6,175,608) | 2,975,066 | 191,046,026 |

| | | | |
|---|---|---|---|
| தொழிநுட்ப உதவி மற்றும் கற்கைகள் | 14,992,123 | 7,145,890 | 83,267,559 |
| பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | 23,030,533 | 7,221,205 | 98,908,804 |
| ஒப்பந்த மற்றும் சேவை வழங்குனர் | 30,566,621 | 28,482,642 | 93,883,902 |
| நிதி (மீளளிப்பற்ற மானியங்கள்) | 39,415,500 | 27,241,939 | 72,252,939 |
| அதிகரிக்கும் கடன்கள் | 65,770,598 | 111,122,074 | 190,841,280 |
| சம்பளங்களும் படிப்பணமும் | 41,721,958 | 42,821,125 | 246,018,595 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 22,595,333 | 23,342,610 | 129,060,269 |
| கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் மானியங்களில் ஏற்பட்ட செலவினம் | இல்லை | இல்லை | 116,899,084 |
| மொத்தம் | 440,127,441 | 1,014,694,785 | 3,890,562,289 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான இலங்கை மத்திய வங்கியின் விசேட (டொலர்) கணக்குகளின் செயற்பாடுகளும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காணப்பட்ட மீதியும் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | ஐ.அ. டொலர் | இலங்கை ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 332,003 | 42,217,773 |
| கூட்டுக :- | | |
| மீள் நிரம்பல்கள் | 1,606,028 | 206,398,407 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 1,295,293 |
| | 1,938,031 | 249,911,473 |
| கழி:- | | |
| மீளெடுப்புக்கள் | 1,907,465 | 245,914,907 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 30,566 | 3,996,566 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கு செயற்திட்டத்தால் செலுத்தவேண்டியிருந்த ஐ.அ.டொலர் 175,846 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தன.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 31.35 | 3,386.81 | 401.56 | 427.75 | 31.66 | 3,714.89 |
| இலங்கை அரசாங்கம் | 4.37 | 471.96 | 12.38 | 12.38 | 1.43 | 154.89 |
| நலனாளிகள் | 0.42 | 45.67 | - | - | 0.19 | 20.78 |
| மொத்தம் | 36.14 | 3,904.45 | 413.94 | 440.13 | 33.28 | 3,890.56 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில நடவடிக்கைகள் மீது ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் கருத்திற் கொள்ளக்கூடியளவு அவற்றின் மீது செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை விஞ்சியிருந்ததுடன் அந்த மிகைகள் செயற்திட்டத்தின் வேறு நடவடிக்கைகளிற்காக இழப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மீள் ஒதுக்கீடுகளிற்காக நிதியளிக்கும் முகவரிடமிருந்து உரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கூறு | ஒதுக்கப்பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு | ஒதுக்கீட்டிற்கு மேலான மிகைகள் | மிகைகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| ---------- | ------------------ | ------------- | --------------- | ------------- |
| | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | |
| சிவில் வேலைகள் | 10,170,600 | 12,807,603 | 3,637,003 | 125.9 |
| சேவை வழங்குநர்களுடனான ஒப்பந்தங்கள் | 154,100 | 410,838 | 256,738 | 266.6 |
| சம்பளங்கள் மற்றும் படிகள் | 693,450 | 838,437 | 144,987 | 120.9 |

(ஆ) பின்வரும் கூறுகளின் நிதிகளின் பயன்பாட்டு சதவீதம் குறைவாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

| கூறு | ஒதுக்கப்பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு | சேமிப்புகள் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| ---------- | ------------------ | ------------- | --------------- | ------------- |
| | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | |
| மோட்டார் வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் படகுகள் | 508,530 | 34,918 | 473,612 | 6.9 |
| தொழில்நுட்பு உதவிகள் மற்றும் கற்கைகள் | 308,200 | 51,476 | 256,724 | 16.0 |

(இ) பெண்களிற்காக சிறுநிதி முயற்சிகளிற்காக மீளளிப்பற்ற மானியங்களிற்காக கடன் இலக்கங்கள் 664 எல்கே மற்றும் 693 எல்கே என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளில் முறையே 69 சதவீதம் மற்றும் 4.6 சதவீதம் செயற்திட்ட கால இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 2,510,819 இற்கு சமமான ஐ.அ.டொலர் 19,240 கியத்தை மீளளிப்பு செய்வதற்கு 2013 ஆகஸ்ட் 13 இல் செய்யப்பட்ட கோரிக்கை கடனளிக்கும் முகவரால் நிராகரிக்கப்பட்டது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

(அ) நிகழ்ச்சித்திட்டமானது நிலைபேறாக முகாமைசெய்கின்ற கடற்கரை வளங்களின் நோக்கங்களை அடைவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நிகழ்ச்சித்திட்டத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பூர்த்தியாக்கல்

அறிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி இறுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் சமூக பொருளாதார உட்டகட்டமைப்பு கூறின் கீழ் 07 நடவடிக்கைகளில் இலக்குகளை அடைதல் 33 சதவீதம் முதல் 84 சதவீதம் வயையான வீச்சில் இருந்தது.

| | **நடவடிக்கை** | **இலக்கு** | **உள்ளபடி** | **இலக்கின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| (i) | புதிய வீடுகளின் நிர்மாணம் (அலகுகள்) | 1,000 | 793 | 79 |
| (ii) | வீடுகளின் புனரமைப்பு (அலகுகள்) | 1,130 | 633 | 56 |
| (iii) | கிணறுகளின் நிர்மாணம் (அலகுகள்) | 1,350 | 590 | 44 |
| (iv) | சமையலறைகளின் நிர்மாணம் (அலகுகள்) | 1,200 | 858 | 72 |
| (v) | மழைநீர் பயிற்செய்கை முறைமைகள் நிர்மாணம் அல்லது புனரமைப்பு | 1,200 | 807 | 67 |
| (vi) | குடிதண்ணீர் முறைமைகள் நிர்மாணம் அல்லது புனரமைப்பு (அலகுகள்) | 150 | 50 | 33 |
| (vii) | வீதிகளின் (தீர்ப்பனவு) நிர்மாணம் அல்லது புனரமைப்பு (கிலோமீற்றர்கள்) | 100 | 84 | 84 |

### 6.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவராண்மை, இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், இலங்கை மீன்பிடி மற்றும் துறைமுகக் கூட்டுத்தாபனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரக மூலவள அபிவிருத்தி அமைச்சு போன்ற நிறுவனங்களிற்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களிற்கான சான்றுபடுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், அந்த நிறுவனங்களின் உரிய பிரிவுகளால் பொருளிருப்பு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. ஆகவே, வௌத்தரப்பினரால் அத்தகைய சொத்துக்களின் பயன்படுத்துகை கணக்காய்வில் நம்பிக்கைகொள்ள முடியவில்லை.

### 6.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளின் கூறின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நடவடிக்கைகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையில் வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளிற்கான ஒதுக்கீகள் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளர் 2013ஆகஸ்ட் 25 ஆந் திகதிய எஸ்எவ்/6/1/2/05 ஆம் இலக்க அவருடைய கடிதத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் நிதிகள் குறித்த நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், வெளிநாட்டு பயிற்சி நோக்கங்களிற்காக செயற்திட்டத்தால் ரூபா 19,867,014 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 செப்தெம்பர் 03 முதல் 21 வரை நேபாளத்தில் நடைபெற்ற மகளீர் மேம்பாட்டு- புதிய வியாபார மற்றும் நிலைபேறான தேசிய வள முகாமைத்துவம் மீதான செயலமர்வில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். உரிய உத்தியோகத்தர்கள் செயலமர்வின் பின்னர் மூன்று நாட்களிற்காக வெளிநாட்டில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் ரூபா 228,228 தொகையான இடைநேர் மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சனாதிபதி செயலாளரின் 2012 யூன் 12 ஆந் திகதிய சீஎஸ்1/1/16 ஆம் இலக்க கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் மற்றும் உத்தியோகத்தர்களிற்கு செய்யப்பட்ட தனிப்பட்ட அமைப்பிதழ்களில் வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருக்கவில்லை. இருந்தபோதிலும், 6 கணக்காளர்கள் ஈ மெயில் ஊடாக தனிப்பட்ட ரீதியில் அந்த உத்தியோகத்தர்களிற்கு செய்யப்பட்ட அழைப்பிதழ்களில் 2013 ஒக்தோபர் 9 முதல் 11 வரை தாய்லாந்தில் நடைபெற்ற நிதி முகாமைத்தவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். இது தொடர்பில் ஏற்பட்ட செலவினம் ரூபா 1,547,267 ஆகும்.

(ஈ) செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு பயிற்சி மற்றும் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்த உத்தியோகத்தர்களால் நாட்டிற்கு திரும்பிய திகதியிலிருந்து 02 வாரங்களிற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நலன்கள் மீதான அறிக்கையான அத்தகைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்குவதற்காக பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் அறிவாற்றல் பகிர்வு கருத்தரங்கு போன்வற்றில் பங்குபற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது வெளிநாட்டிற்கு பல உத்தியோகத்தர்கள் வருகைதந்திருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டம் அவற்றின் மீது ரூபா 19,867,014 ஆன கிரயம் ஏற்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கேரம்படுகின்றது.

(அ) சொத்துக்களின் முகாமைத்துவம்
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் செலவினம்